மாலை முரசு

பக்கங்கள் 17 + 2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை 22.10.2024 | அதிர்வு 82

## கண்டி பொலிஸ் பிரிவில் இரண்டு சடலங்கள் மீட்பு!

**அடையாளம் காணப்படவில்லை**

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து! 28 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்!!

(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)



# யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருங்கள்!

## தமிழரசின் யாழ். - கிளி. தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சிறீதரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதற்கப்பால், யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 02

# கௌதாரிமுனையில் மணல் அகழ்வுக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

## சுமந்திரன் தலைமையில் நடவடிக்கை என்கிறார் சயந்தன்

(பிரபாகரன் டிலக்சன்)

"கிளிநொச்சி – கௌதாரிமுனையில் இடம்பெறும் தொடர்ச்சியான மணல் அகழ்வினால் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பிரதேச மக்கள் வாழுகின்ற உரிமையைக்கூட இழக்க நேரிடலாம். அதனால் உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் ஒரு அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தொடுக்கவுள்ளோம்."

– இவ்வாறு இலங்கைத் 02









## யாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி – புன்னைநீராவி வட்டாரத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மக்களோடு கருத்துகளைப் பரிமாறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாற்றம் என்னும் மாய அலையின் பின்னாலும், இளையவர்கள் – புதியவர்கள் என்ற போர்வையிலும் மக்களைக் குழப்பி, வாக்குகளைச் சிதறடிக்கும் சம நேரத்தில் தேசியக் கட்சிகளோடு ஐக்கியமாகி இனத்தின் இருப்பையே இல்லாமல் செய்யும் பேரினவாத நிகழ்ச்சி நிரல்கள் குறித்து எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். எமது மக்களின் எழுபது ஆண்டுகால அரசியல் அபிலாஷைகளை நீர்த்துப்போகச் செய்யும் சக்திகளை, சமரசங்களுக்கு இடமற்று எமது மக்கள் நிராகரிக்க வேண் டும்." – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், புன்னைநீராவி வட்டாரத்தின் செயற்பாட்டாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கௌதாரிமுனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி கேசவன் சயந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கௌதாரிமுனையில் பல இயற்கையான மணல்மேடுகள் காணப்படுகின்றன. இந்த மணல்மேடுகளானது கடல் நீர் உட்புகாமல் தடுப்பணைகளாகச் செயற்பட்டு வருகின்றன.

ஆனால், கடந்த சில வருடங்களாக இங்கு மணல் அகழ்வு மிக மோசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் கடல் நீர் உட்புகுந்து இந்தக் கிராமமே முற்றாக அழிந்து விடக்கூடிய ஆபத்தான நிலையில் உள்ளது.

இதனைத் தடுப்பதற்காக இந்தப் பிரதேச மக்கள் பல போராட்டங்களை மேற்கொண்டிருந்தார்கள். மணல் அகழ்வு செய்கின்ற வாகனங்களைத் தடுத்து நிறுத்தியும் போராடியிருந்தார்கள். அதன்பின்னர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் பூநகரி பொலிஸாரால் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றத்திலே மணல் அகழ்வுக்குத் எதிராகத் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

அந்தத் தடை உத்தரவுக்கு எதிராக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு விண்ணப்பம் ஒன்றையும் தாக்கல் செய்தார்கள்.

அதன்பிரகாரம் குறித்த மணல் அகழ்வு கனிய வளங்கள், சுரங்க திணைக்களத்தின் அனுமதி பெற்று மேற்கொள்வதாகவும், இந்தத் தடை உத்தரவைத் தொடர்ந்து பேண முடியாது என்ற கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

இதன் காரணமாக தற்போது வரை தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்றது. இந்நிலையில், நேற்றையதினம் நானும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் மணல் அகழ்வு இடம்பெறும் இடத்துக்குச் சென்று பார்வையிட்டோம்.

அந்தப் பிரதேசத்தில் ஏறக்குறைய 15 அடிக்கு மேலாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த மணல் அகழ்வினால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது. இயற்கை தாவரங்கள் அழிவடைகின்றன. கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்படுகின்றது.

இந்தப் பிரதேச மக்கள் வாழுகின்ற உரிமையைக்கூட இழக்க நேரிடலாம். அதனால் உயர்நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் ஒரு அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தொடுக்கவுள்ளோம். அதன் பின்னர் இந்த மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

ஏற்கனவே ஏழு வருட கால சட்டப் போராட்டம் நடைபெற்றிருந்த போதும் இந்த மக்கள் தொடர்ந்தும் தாங்கள் ஆபத்தில் இருப்பதாக உணர்கின்றார்கள். கடல் நீர் உட்புகுந்து இந்தக் கிராமத்தை அழித்துவிடும் என்ற அச்சத்தில் அந்த மக்கள் வாழ்கின்றார்கள். இந்த மக்களுக்காக நாங்கள் மீண்டும் ஒருமுறை சட்டப் போராட்டத்தை நடத்த இருக்கின்றோம்," – என்றார்.

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி, கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கராஜ மாவத்தையில் உள்ள உணவு விடுதி ஒன்றுக்கு அருகில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராதனை வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சஜித்தை விட்டு தாவினார் தமிதா

## ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பில் சங்கமம்

நடிகையும் அரசியல் ஆர்வலருமான தமிதா அபேரத்ன, எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் தபால் பெட்டி சின்னத் தில் போட்டியிடும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பில் இணைந்ததுடன், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகுவதாக வும் அறிவித்துள்ளார்.

எஸ்.ஜே.பி.யின் தலைவர் சஜித் பிரேமதாஸ எனக்கு நியாயம் வழங்காத தாலும், எனது ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டாததாலும் நான் எஸ்.ஜே. பியை விட்டு வெளியேறத் தீர்மானித் தேன் என தமிதா அபேரத்ன நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



ஒக்டோபர் 11 ஆம் திகதி வேட்புமனுக் கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி நாளான கடைசி நேரத்தில் இரத்தினபுரி மாவட்டத்துக்கான எஸ்.ஜே.பி.யின் வேட்பாளர் பட்டியலில் தமிதாவின் பெயர் சர்ச்சைக்குரிய வகையில் நீக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக் கது.

# கொழும்பில் சஜித்தை முந்துவாரா ஹர்ஷ?



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. கூட்டணியில் இருந்து சம்பிக்க ரணவக்க வெளியேறியுள்ள நிலையில் மேலும் சில உறுப்பினர்கள் அதிருப்தி நிலையில் உள்ளனர். கூட்ட ணியில் மட்டும் அல்ல ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் உள்ளக மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த அஜித் மானப்பெரும தேர்தலில் இருந்து விலகியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்துக் காகப் பிரசாரம் செய்த நடிகை தமிதா, தற்போது சஜித் தரப்பை விளாசித்தள்ளி வருகின்றார். நேற்று கட்சியும் தாவினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பதவி விலக முடிவெடுத்திருந்தாலும் அவரது பதவி விலகல் கடிதத்தை சஜித் ஏற்கவில்லை. ஹிருணிக்காவை தற்காலிகமாகச் சமரசப்படுத்தும் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, சஜித்தின் தலைமைத் துவத்துக்கு எதிராக கட்சிக்குள் சில உறுப்பினர்கள் கருத்துக்களை முன் வைத்து வருகின்றனர். கட்சியின் தலைமைப் பதவியை கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்குமாறும் வலியுறுத் தப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித் பிரேமதாஸ, ஹர்ஷ டி சில்வா ஆகிய இருவரும் இம்முறையும் கொழும்பு மாவட்டத்தி லேயே போட்டியிடுகின்றனர். கடந்த முறை எதிரணி விருப்பு வாக்குப் பட்டி யலில் சஜித் முதலிடம் பிடித்திருந்தாலும் இம்முறை ஹர்ஷ டி சில்வாவுக்கே வாய்ப்பு அதிகம் எனக் கூறப்படுகின் றது.

ரணில் விக்கிரமசிங்க போட்டி யிடாததால் அவரை விரும்பக்கூடிய தரப்புகள், ஹர்ஷ டி சில்வாவையே ஆதரிக்கக்கூடும். விருப்பு வாக்குப் பட்டியலில் சஜித் பின்தள்ளப்பட்டு, ஹர்ஷ முதலிடம் பிடித்தால் அது சஜித்தின் தலைமைப் பதவிக்கும் ஆபத் தாக அமையவுள்ளது.



# இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து! 28 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்!!

இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் சுமார் 28 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவ்ரும்பிட்டிய வளைவுக்கு அருகில் கொழும்பில் இருந்து எம்பிலிப்பிட்டிய சூரியவெவ நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் இரத்தினபுரியில் இருந்து கொழும்பு நோக்கப் பயணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அவிசாவளை ஆதார வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளமையுடன் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அலவ்வ – கிரிஉல்ல வீதியின் போயவலன நகரில் பயணிகள் பஸ்ஸும் வானும் இன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வானின் சாரதியும் மற்றுமொருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே குளியாப்பிட்டிய கடனெகெதர பிரதேசத்தில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி இன்று காலை விபத்துக்குள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









# மன்னாரில் தேர்தல் பரப்புரையில் முன்னாள் போராளி வேட்பாளர்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வன்னி தேர்தல் தொகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் பெண் வேட்பாளர் போராளி யசோதினி மன்னாரில் பல பாகங்களிலும் தனது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தார்.

அவருக்கு ஆதரவாக முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மன்னார் நகர பஜார் பகுதியில் ஆதரவாளர்களுடன் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

மேலும் மன்னார் சாந்திபுரம் பேசாலை, நானாட்டான் பகுதியிலும் சந்திப்புகளை மேற்கொண்டார்.

இதில் மன்னார் மாவட்ட சங்க உறுப்பினர்கள், போராளி நலம்புரிச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# திருமலையில் தமிழ்பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது!

## முதன்மை வேட்பாளர் குகதாசன் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தை அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். இதைப் பாதுகாக் வேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

மூதூரில் நேற்று (21) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

தண்டவாளம் போன்று இனப் பிரச்சினைக்கான தீர்வையும் அபிவிருத்தியையும் இணைந்த வகையில் அரசியலை முன்னெடுப்பது சிறந்தது.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் தமிழ் நாட்டில் சுமார் 2000 குடும்பங்களும் கனடா நாட்டில் சுமார் 500 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் பிரதிநிதித்துவம் இந்த முறை அதிகமான வாக்களிப்பின் ஊடாக பாதுகாப்பதற்கு விழிப்புணர்வுகளை இளைஞர்கள் மத்தியில் நடத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவம் இம்முறை குறைவடைந்துள்ளது. 1827களில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பில் 81 வீதமாக இருந்த தமிழ் மக்கள் தொகை தற்போது 24



வீதமாக குறைவடைந்துள்ளது. அம்பாறையில் 18 வீதமாக குறைவடைந்துள்ளது. எனவேதான் அனைவரும் மனம் தளராமல் வீட்டு சின்னத்துக்கு வாக்களிக்கவும். இதன் மூலம் தமிழ் தேசியத்தை பாதுகாக்கவும்.- என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அளவோடு அளியுங்கள்!

ஏறத்தாழ இன்னும் மூன்று வாரங்களில் - நவம்பர் 14ஆம் திகதி - நடைபெறவிருக்கும் பொது தேர்தலில் தமது தேசிய மக்கள் சக்திக்கு வலிமையான நாடாளுமன்ற அரசு ஒன்றை அமைப்பதற்கான ஆணையை தருமாறு புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கோருகிறார்.

நிறைவேற்று அதிகாரம் ஒரு தரப்பிடமும் நாடாளுமன்றப் பெரும்பான்மை இன்னொரு தரப்பிடமுமாக குழப்பமான ஒரு சூழல் இருக்குமானால், நாட்டின் தற்போதைய பொருளாதார இக்கட்டு நிலையிலிருந்து நாட்டை நகர்த்திச் செல்வது நெருக்கடியானதாக அமையும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

ஆகையினால் நிறைவேற்றதிகாரமும் நாடாளுமன்ற அதிகாரமும் ஒன்றித்துச் செயல்படக்கூடிய வகையில் இரண்டுமே ஒரே தரப்பிடம் இருப்பதுதான் இப்போதைய சூழலில் பொருத்தமானது என்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

ஆயினும் அந்த நாடாளுமன்ற அதிகாரம் அல்லது பெரும்பான்மை எவ்வளவு தூரம் ஆளும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் தரப்புக்கு - அதாவது தேசிய மக்கள் சக்திக்கு - கிடைக்க வேண்டும், கிடைப்பது பொருத்தமானது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

அறுதிப் பெரும்பான்மையை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி இந்த பொதுத் தேர்தலில் பெறும் என்பது பொதுவான நம்பிக்கை. அதில் அவதானிகளுக்கு சந்தேகம் இல்லை.

ஆயினும், அறுதிப் பெரும்பான்மையையும் தாண்டி, மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையை இந்த அரசு பெற்றுக் கொள்ளுமா, அதை எதிர்பார்த்துத்தான் நிறைவேற்றதிகார ஜனாதிபதி விடயங்களை நகர்த்துகின்றாரா என்ற கேள்விகள் வருகின்றன.

புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் இடதுசாரிகளிடம் அப்படி மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலமும் கிட்டுவது ஒரு வகையில் ஆபத்தானது.


இலங்கையின் கடந்த 46 வருட நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலங்களில் அவர்களுக்கு வலிமையான நாடாளுமன்ற அதிகாரம் கிடைத்த போதெல்லாம் ஆட்சி முறையில் இடம் பெற்ற அராஜகங்கள், அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், தவறான நடவடிக்கைகள், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் போன்றவை நாட்டுக்கு துரதிர்ஷ்டமான பட்டறிவாக இருக்கின்றன. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ போன்றோர் அத்தகைய மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஆடிய ஆட்டங்கள் மறந்து போகக்கூடியவை அல்ல.

அதிகாரத் துஷ்பிரயோகம், ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றை ஒழிப்பதுதான் தங்களின் பிரதான அரசியல் காரியம் என்ற கூற்றோடு புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பதவிக்கு வந்திருந்தாலும், அவர் தரப்பினரும் காலகதியில் நிறைவேற்றதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த ஜனாதிபதிகள் வரிசையில் சேரமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஆகையினால், ஆட்சியை சுமுகமாகக் கொண்டு நடத்துவதற்கான நாடாளுமன்ற வலிமையை புதிய ஜனாதிபதி தரப்புக்கு நாட்டு மக்கள் வழங்க முன்வந்தாலும் அது எல்லை மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தேசிய இனப் பிரச்சினை தீர்வு போன்ற நாட்டின் முக்கிய விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து நகர்வதுதான் சாத்தியமானதும் முறையானதாகவும் பொருத்தப்பாடானதாகவும் இருக்கும்.

ஆகவே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் தேவைப்படும் சமயங்களில் எதிர்க்கட்சித் தரப்புகளையும் அரவணைத்து காரியங்களை புதிய ஆட்சிபீடம் முன்நகர்த்தக் கூடியதான ஓர் அரசியல் சூழ்நிலையை இந்தத் தேர்தல் மூலம் இலங்கை மக்கள் புதிய ஆட்சியாளர்களுக்கு அளிப்பதுதான் சாலப் பொருத்தமானதாக இருக்கும்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# மக்கள் பிரச்சினை அறிந்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள்!

## ஜனநாயக தேசியக் கூட்டணி வேட்பாளர் தங்கவேலு

(த.சுபேசன்)

மக்களுடைய அடிமட்டப் பிரச்சினைகளை நன்றாக அறிந்தவர்களை நாடாமன்றத்துக்கு அனுப்ப மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் தி.தங்கவேலு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றிருந்த ஜனநாயக தேசியக் கூட்டணியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களாக உங்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்களை உங்கள் கிராமத்தில் அல்லது பிரதேசத்தில் இருக்கும் ஒருவரை அனுப்புங்கள்.



கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒரு தரப்பினர் நீதிமன்றில் இருந்த நீதியரசரை வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நியமித்தனர். அவர்கள் தம் மீது நம்பிக்கை இல்லாததால் தான் அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்தனர்.

ஆனால் முதலமைச்சராக வந்தவருக்கு மக்களின் அடிமட்ட பிரச்சினை தெரியாது. கொழும்பில் நீதிபதியாக இருந்தவருக்கு வடக்கு மக்களின் பிரச்சினை தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

மக்கள் இனிமேலும் அவ்வாறான தவறுகளை விடக்கூடாது. கிராம மட்டத்தில் இருந்து மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்த ஒருவருக்கு வாக்களித்து அவரை நாடாளுமன்றம் அனுப்பி உங்களுடைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

இன்று பலரும் தம் மீது நம்பிக்கை இன்றி வேறு பொதுக் கட்டமைப்புக்களுடைய சின்னங்களை வலிந்து எடுத்து தேர்தலில் போட்டியிடுகின்றனர்.


ஆனால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தலைமையிலான எமது ஜனநாயக தேசிய கூட்டணி இம்முறை முதன்முறையாக தபால் பெட்டி சின்னத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறது.

நாம் கடந்த காலத்தில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எம்மை வெற்றிபெற வைக்கும்.-










# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் கனடாவில் நவம்பர் வெளியாகவுள்ளன

கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர் இ. பாலசுந்தரம் வழங்குவார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ்பெற்ற வானொலி அறிவிப்பாளர் இளங்குமரன், கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் கா. யோ. கிரிதரன், மற்றும் எழுத்தாளர் திருமதி. சிறி ரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் திரு. லெனி மரியதாஸ் நிகழ்த்துவார்.

அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் மீரா பாரதி ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் அகனி சுரேஷ் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும், நூலாசிரியரின் ஊடக எழுத்து பற்றி உலகத் தமிழர் ஆசிரியர் கமல் நவரட்ணம் வழங்குவார். கனடாவில் நிகழும் இந்த நூல் வெளியீட்டின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.



# பிரான்ஸில் நடைபெற்றுள்ளன திருக்குறள் திறன் போட்டிகள்



பிரான்ஸ் தமிழ்ச்சோலைத் தலைமைப்பணியகத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் திறன் போட்டியின் திணைக்கள மட்டத்திலான போட்டிகள் கார்ஜ் சார்சல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இப்போட்டியில் சுமார் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையான பெற்றோர்களும் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

பிரான்சு தமிழ்ச்சோலைகளுக்கான திணைக்கள மட்டத்திலான திருக்குறள் திறன் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுகளையும் மாணவர்களை வழிநடத்திய தமிழ்ச்சோலை நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் தமது நன்றியையும் தமிழ்ச்சோலை தலைமைப்பணியகம் தெரிவித்துள்ளது.

இறுதிப் போட்டிகள், ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிறன்று நடைபெறவுள்ளது.







# சுவிஸ் தூதரக அரசியல் விவகார செயலாளர் செல்வம் அடைக்கல நாதனுடன் சந்திப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக்கான சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை (22) மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதன் போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் டானில் வசந்தும் கலந்து கொண்டார்.

இதன் போது கட்சியின் செயல்பாடுகள் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தற்போதைய தேர்தல் நிலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து சுவிஸ் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலும் செல்வம் அடைக்கலநாதன் அவர்களது கவனத்துக்குக் கொண்டு வந்தார்.



# சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் மன்னாரில் சந்தித்த சுவிஸ் அரசியல் குழு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை (22) மன்னாருக்கு ச் சென்றிருந்த நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்துக்கும் விஜயம் செய்திருந்தனர்.

இதன் போது அந்தக் குழுவினர் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலமைகள், பொருளாதாரம், தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர் என்று சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

இதன் போது தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு கூறல்கள் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் சிவில் சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் நிலைப்பாடுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.








# ‘கனவுகள் சுமக்கும் காலம்’ நூல் வெளியீடு!

(பழுவூரான்)

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருமதி அசோகாம்பிகை யோகராஜா எழுதிய “கனவுகள் சுமக்கும் காலம்” நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (20) மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

அறிமுகவுரையினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் மு.கணேசராசா நிகழ்த்த, நூலின் முதல் பிரதியை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் செ.அமிர்தலிங்கம் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து அதிதிகள் உட்பட நிகழ்வில் கலந்து கொண்டோருக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது நூல் நயவுரையினை கவிஞர் ஜிஃப்ரி ஹாசன் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியை திருமதி அசோகாம்பிகை யோகராஜா நிகழ்த்தினார்.



# புதிதாக வந்த ஜனாதிபதியால் மலையகத்துக்குப் பயனில்லை!

## நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மருதபாண்டி ராமேஸ்வரன்

( பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

புதிய ஜனாதிபதி ஊடாக மலையகத்துக்கு எவ்வித பயனுமில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கள்கிழமை பொக வந்தலாவ பகுதியில் ஏற்பாடு செய் யப்பட்ட தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரி வித்த நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மருதபாண்டி ராமேஸ்வரன்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் கூறியதுபடி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளத்தை பெற்றுக் கொடுத்தோம்.

எதிர்வரும் காலங்களில் எமது சமுகத்துக்கு என்ன தேவையென நாம் சிந்திக்க வேண்டும். எமது சமுகத்துக்குக் கல்வி என்பதே முக்கியம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலப் பகுதியில் கல்விக்கு முக்கியதுவம் வழங்கியிருக்கிறது.

தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வரும் மாற்று கட்சியின் வேட்பாளர்கள் காங்கிரஸ் என்ன செய்தது என கேல்வி எழுப்புவார்கள். இது போன்ற கேல்வி எழுப்பும் போது மாற்றுக் கட்சி வேட்பாளர்கள் மக்களுக்கு செய்துள்ளார்கள் என கேட்கிறேன்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்திலோ அல்லது உதவி ஆசிரியர் நியமணங்கள் பெற்றுக் கொடுத்த போது இலங்கை தொழிலாளர் காங்ரசை சார்ந்தவர்களுக்கு மாத்திரம் பெற்றுக்கொடுக்கவில்லை இ.தொ.கா. என்பது சமுக ரீதியாக மாத்திரம் செயற்படும்.

எந்த சின்னத்தில் கேட்பது என்பது கூட தெரியாமல் அநேகமான சுயேட்சை கட்சிகள் இம்முறை போட்டியிடுகின்றன. நாடாளுமன்றத்துக்குப் போனவர்கள் மக்களுக்கு என்ன செய்துள்ளார்கள். ஆனால் இருவர் மாத்திரம் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மக்களுக்கு எம்மாள் முடிந்த சேவைகளை முன்னெடுத்துள்ளோம் எமது அரசாங்கத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடம் காணி உரிமையைக் கோரினோம் அதனை பெற்றுக் கொடுத்துள்ளோம்.– எனறார்.

# கொள்கைகள் சிதைக்கப்பட்டுப் பிரிந்த கட்சிகள் இன்று தேசியக் கொள்கை பற்றிப் பேசுகின்றன

## விடுதலை புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்டம் வேட்பாளர் பகிரதன் சுகிர்தன் காட்டம்

(வடிவேல் டினேஸ்)

ஒரு கட்சியின் தலைமையை ஒரு தனி நபர் வழிநடத்தி செல்வார். அந்த நபர் இல்லாத போது வேறு ஒருவர் கட்சியை வழி நடத்துவார். அதே போன்றுதான் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானது கட்டமைக்கப் படுட்டுள்ளது.

நேற்று (21) மாலை அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியில் அம்பாறை மாவட்டம் வேட்பாளர் பகிரதன் சுகிர்தன் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

கடந்த கால யுத்த வரலாற்றை மீட்டிப் பார்க்கும் போது, தமிழ்த் தேசியக் கொள் கையுடன் கூடிய கட்டமைப்பை கொண்ட கட்சியை அடையாளப்படுத்த முடியும்.

ஆனால், அந்தக் கட்சியின் தேசிய கொள்கை கட்டமைப்பானது இன்று உடைக்கப்பட்டுப் பிளவடைந்துள்ளது.

இவ்வாறு ஒற்றுமையற்று பிளவ டைந்த கட்சிகள் தேசியத்தை விதைக் கின்றோம் என்ற நோக்கில் மக்களி டையே தற்போது பிரச்சாரம் செய்வது கவலையளிக்கின்றது.

பிரதி நிதித்துவம் என்பது மக்களுக் குச் சேவையற்றுவதாகும். மாறாகத் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சிகளில் களமிறங்கி வாக்கு சம்பாதித்து பைகளை நிரப்பிக் கொள்ளுவதற்கல்ல.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு தேவைப்பாட்டைக் கொண்டமைந்த பகுதிகளாக காணப்படுகின்றன.




பொத்துவில் பிரதேசத்தில் யானை தொல்லை அதிகம். அதேபோன்று கோமாரி பிரதேசத்தில் குடி தண்ணீர் பிரச்சினை காணப்படுவதுடன் அடிப் படை சுகாதார வசதிகள் தேவையான கிராமமாக இது காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் வைத்தியசாலை சுகாதார வசதிகள் அதிகம் தேவையுள்ள வைத்தியசாலையாக காணப்படு கின்றது.

இங்குள்ள மக்கள் வங்கி, வைத்திய சேவையை பெற்றுக் கொள்ள தென் திசையில் பொத்துவில் பிரதேசத்துக்கும் வடதிசையில் திருக்கோவில் பிரதேசத் துக்கும் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை தற்போதும் காணப்படுகின்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி தேவைப்பாட்டுடன் உள்ளது. தரமுயர்த் தப்பட வேண்டிய வைத்தியசாலையாக உள்ளது. தம்பிலுவில் தொடக்கம் தாண்டியடி வரையுள்ள மக்கள் இங்கு சிகிச்சைக்க வருகின்றனர்.

அதே போன்று பல வருடங்களாக அம்பாறை மாவட்டதில் அரசியல் பேசப்பட்டு இன்னும் தீர்க்கப்படாத விட யங்களாக திருக்கோவில் இல்மனைட் தொடர்பான பிரச்சினை மற்றும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செய லக தரமுயர்வு போன்ற பல முக்கிய பிரச்சினைகள் அரசியல் பேசும் விடயங் களாக காணப்படுகின்றன. ஆனால் இன்றளவும் தீர்வுகள் கேள்விக்குறியே.- என்றார்.

# திட்டமிடல் சேவைக்கு 43 பேர் நியமனம்; தமிழ்மொழிமூல பரீட்சாத்திகளுக்கு அநீதி!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை திட்டமிடல் சேவையின் 3 ஆம் தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் தமிழ் மொழி மூலம் தோற்றிய தமிழ், முஸ்லிம் பரீட்சாத்திகள் எவரும் உள்வாங்கப்பட வில்லை.

அவர்கள்புறக்கணிக்கப்பட்டுள்ளமை அவர்களது அடிப்படை உரிமையை மீறும் பாரிய அநீதியாகும் என்று மனித உரிமை செயற்பாட்டாளரும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்,

இந்த நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை



அரச சேவைகள் ஆணைக்குழு வெளி யிட்டுள்ளது.

இதன்படி கடந்த 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இலங்கை திட்டமிடல் சேவைக்காக 43 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றியவர்களாவர்.

தமிழ், சிங்கள மொழி மூலம் போட் டிப் பரீட்சையை நடாத்திய பின்னர் நிய மனத்துக்காகத் தமிழ் மொழி மூலத்தைக் கவனத்தில் கொள்ளாமல் சிங்கள மொழியை மட்டும் கவனத்தில் கொள்வ தானது விண்ணப்பதாரிகளின் அடிப் படை மொழி உரிமை மீறும் பாரிய அநீதியாகும்.

இவ்வாறு ஒரு மொழியை மாத்திரம் கவனத்தில் கொள்ளும் போக்கு அண் மைக் காலமாக அதிகரித்து வருகிறது.

இதனை தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகளும் புத்திஜீவிகளும் சிவில் சமூக அமைப்பினரும் அரச உயர் மட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்வு பெற முயற்சிக்க வேண்டும்.- என்றார்.




# குகதாசனின் பிரச்சாரப் பணிகள் திருமலை மூதூர் கிழக்கில் ஆரம்பம்

(ஏ.எச்.ஹஸ்பர் )

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சண்முகம் குகதாசனின் தேர்தல் பிரசாரப்பணிகள் நேற்று முன்தினம் (20) மூதூர் கிழக்கில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது துண்டுப்பிரசுரம் மூதூர் கிழக்கு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ. அரசரத்தினத்திடம் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தன்னார்வ செயற்பாட்டாளர்களால், பாட்டாளிபுரம், வீரமாநகர், சீனன்வெளி, உப்புறல், இளங் கத்தை, இத்திக்குளம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மலை முந்தல் உள்ளிட்ட பல பகுதிகளில் குகதாசனால் முன் னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் உள்ளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

# தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் பலமான கூட்டணியாக எமது கூட்டணி உள்ளது!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

அரசு தமிழ் மக்களுக்கு தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பதை கூறி கொண்டுள்ள நேரத்தில் வடக்கு, கிழக்கில் போட்டியிடும் ஜன நாயக தமிழ் தேசிய கூட்டணியைத் தவிர ஏனையவர்கள் தேசிய இனப் பிரச்சினை என்று ஒன்று இல்லை என் பதை அரசின் அதே நிலைப்பாட்டுடன் ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் இம்முறை போட்டியிடும் மிக பலமான கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டி யிடுகிறது.

அதேவேளை இத் தேர்தலானது அதிகூடிய நாடாளுமன்ற வேட்பாளர் களை கொண்டு வெற்றி பெற்று நாடா




ளுமன்றம் செல்லுகின்ற ஒரு கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் தேசிய இன பிரச் சினை தீர்க்கப்பட வேண்டும் என்கிற விடயத்தில் பலமான ஒரு கூட்டணியாக எமது கூட்டணி காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப் பிரச் சினை காணப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்காகப் பல வருடங் களாக அகிம்சை ரீதியாகவும், ஜன நாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடி உள்ளனர். இதனால் ஆயிரக் கணக் கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சி னையை முன் நிறுத்தி நாங்கள் வடக்கு, கிழக்கில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இருந்தோம். மிகக் குறுகிய காலத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் எமக்கு வாக்களித்துள்ளனர்.

அது இந்த நாடாளுமன்ற தேர்தலில் இரட்டிப்பான ஆதரவை தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குவார்கள்.

இந்த தேர்தல் காலத்தில் அரசு தமிழ் மக்களுக்குத் தேசிய இனப் பிரச்சினை இல்லை என்பதை கூறி கொண்டுள்ள அதே நேரத்தில் வடக்கு, கிழக்கில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியைத் தவிர ஏனைய வர்கள் தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்பனை அரசின் அதே நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

மக்கள் எங்களுக்கு இரட்டிப்பான ஆதரவு வழங்குவார்கள் என்ற நம் பிக்கை எமக்கு உள்ளது.- என்றார்.







## கனடாவும் காலிஸ்தானும்:

# இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏன்?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா.

இந்தியா கனடா உறவை பாதித்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரம் மீண்டும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. அத்துடன் இந்தியா மீது தடை விதிக்க போகிறதா கனடா என்ற ஐயமும் எழுந்துள்ளது.

காலிஸ்தான் அமைப்பின் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்தாண்டு கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் இந்தியா – கனடா உறவில் நீண்ட காலமாக விரிசல்களை ஏற்படுத்தி வருகிறது.

இதன் விளைவாகக் கனடாவில் இருந்து இந்திய தூதரை திரும்பப் பெற்ற மத்திய அரசு, டெல்லியிலுள்ள கனடா தூதரை வெளியேறவும் உத்தரவிட்டது.




### பிஷ்னோய் கூலிப்படை

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கனடா நாட்டு பிரஜையான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட பிறகு அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்தக் கொலைக்கு இந்தியாதான் காரணம் என்று அப்பட்டமாக குற்றம்சாட்டினார். உடனடியாக அதனை இந்தியா முழுமையாக நிராகரித்தது.

அதன் பிறகு இரு நாடுகளும் அவரவர் பிரதிநிதிகளை சொந்த நாடுகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்தனர். இதன் பிறகு இரண்டு நாடுகளுக்கும் இடையே பாரிய கருத்து மோதல் ஏற்பட்டது.

தற்போது இருநாட்டு உறவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. இந்த உறவை சீராக்க சிறிய அளவில் சாத்தியம் இருப்பதாகவும் தோன்றுகிறது. நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்திய தூதர்களை நேரடியாகக் குறைகூறும் வகையில் கனடா பிரதமர் ட்ரூடோ பேசியது மேலும் சிக்கலை அதிகரித்தது.

கனடா மண்ணில் இந்திய அரசு காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு எதிராக வன்முறைகளை நிகழ்த்தி வருவதாகவும், இதற்கு பிஷ்னோய் கூலிப்படையை பயன்படுத்திக் கொள்ள முயன்றதாகவும் கனடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பல மாதங்களுக்குப் பிறகு, இந தியா மீதான குற்றச்சாட்டுக்குத் தங்களிடம் எந்தவொரு ஆதாரமும் இல்லை என்று கனடா கூறியிருக்கிறது.

ஆயினும் ஹர்தீப் சிங் கொலையில் குற்றச் சாட்டுகளைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கு முன்பே இந்தியாவுடன் ஆலோசனை நடத்தியதாகவும் ட்ரூடோ கூறியுள்ளார்.

கனடா நாட்டில் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜார் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவுடன் தனது அரசு வெறும் ஊகத் தகவலை மட்டுமே பகிர்ந்து கொண்டதாகவும் அதற்கு ஆதாரம் எதுவும் தம்மிடம் இல்லை என்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பின்னர் ஒப்புக்கொண்டார்.

### காலிஸ்தான - சீக்கிய தனி நாடு?

சீக்கியர்களுக்கு தனி நாடு கோரும் காலிஸ்தானிய இயக்கத்தை ஆதரித்து, கனடாவில் வாழும் சீக்கியர்கள் வன்முறையை தூண்டிவருவதாக இந்தியா கருதுகிறது. இது தான் இரு நாட்டுக்கும் இடையே நிலவும் முக்கிய பிரச்னையாகும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1984 இல் பஞ்சாபில் ஏற்பட்ட போராட்டத்தின் ஒரு மோசமான தருணத்தில் இந்திய ராணுவம் அமிர்தசரஸ் பொற்கோயிலில் தாக்குதல் ஒன்றை நடத்தியது.

அதன் பிறகு 1984 ஆம் ஆண்டு இந்தியாவின் அன்றைய பிரதமராக இருந்த இந்திரா காந்தி இரண்டு சீக்கிய மெய்க்காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### காலிஸ்தான் பயங்கரவாதியா ?

ஹர்தீப் சிங் நிஜ்ஜாரை ஒரு “காலிஸ்தான் பயங்கரவாதி” என்று இந்தியா கூறிவருகிறது. ஆனால் கனடா அரசு, கருத்து சுதந்திரத்துக்கும் தனிநபர் சுதந்திரத்துக்கும் ஆதரவளிக்கும் ஒரு நாடாகத் தன்னை முன்னிறுத்தி வருகிறது.

ஒருவர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதை தடுத்து நிறுத்தாது என்றும் கனடா கூறுகிறது. ஆனால் இந்திய அரசு, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, சீக்கியர்களின் வாக்குகளை கணக்கில் வைத்து இவ்வாறு பேசுகிறார் என்று வெளிப்படையாக குற்றம்சாட்டியது.

அவருடைய அரசு காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ஏன் நிராகரிக்கிறது என்ற கேள்வியையும் இந்தியா எழுப்பியது.

இந்தியாவுக்குத் தடை ?

இந்தியாவுக்கு தடை விதிப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தங்கள் பரிசீலனையில் இருந்து வருவதாக கனடா வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி தெரிவித்துள்ளார்.

எனினும் கனடா மண்ணில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அந்நாட்டு அதிகாரிகள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இந்தியா முற்றாக நிராகரித்துள்ளது.

இதற்கெல்லாம் காரணம், கனடாவில் காலிஸ்தான்

தொடர்ச்சி ▼



# இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏன்?

தொடர்ச்சி▲

ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜார் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இந்தியாதான் காரணம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஆண்டு குற்றம் சாட்டி யிருந்தார்.

இதனால் இந்தியா, கனடா இடையேயான உறவு மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கனடாவின் இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்தியா ஆதாரம் கேட்டது. இருப்பினும், ஆதாரம் வழங்க மறுத்த கனடா, தொடர்ந்து இந்திய அரசின்மீது குற்றம் சாட்டி வந்தது.

**6 தூதரக அதிகாரி கனடா நாடுகடத்தல்**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசு குறித்து விமர்சிப்பவர்களின் வாயை அடைக்கும் செயலில் இந்தியாவுக்குத் தொடர்பு இருக்கிறது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியுள்ளார். இதை இந்தியா கடுமையாகச் சாடியது.

இந்த நிலையில், இந்திய வெளியுறவுத்துறை இது குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையேயான உறவுகளில் இந்த ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை




ஏற்படுத்திய சேதத்துக்குக் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மட்டுமே பொறுப்பு என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை கனடிய அரசு, ஹர்தீப் சிங் கொலையைத் தொடர்புப்படுத்தி, கனடாவுக்கான இந்தியத் தூதர் உள்ளிட்ட 6 தூதரக அதிகாரிகளைக் கனடாவில் வெளியேற்றியதாகத் தெரிவித்தது.

கனடாவின் இந்த நடவடிக்கைக்குப் பதிலடி தரும் வகையில், இந்தியாவும் கனடிய தூதரக அதிகாரிகள் ஆறு பேரை வெளியேற்றியுள்ளது. மேலும் கனடாவுக்கான இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தாங்கள் மீட்டுக் கொண்டதாகக் கூறியுள்ளது.

**இந்திய மாணவர் அச்சத்தில்**

கனடாவில் படித்து வரும், படிக்க விரும்பும் மாண வர்களும், படிப்பை முடித்ததும் அங்கு வேலையைத் தொடர்வதற்கு விரும்புபவர்களும், இந்தியர்களுக்கு விசா அனுமதி கொடுப்பதில் கனடா கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடும் என்ற அச்சத்தில் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

அதேவேளையில், இரு நாடுகளுக்கும் இடையேயான விரிசலால், விசா கொள்கைகள் இந்தியர்களைப் பாதிக்க வாய்ப்பில்லை. இந்தப் பிரச்சினைகள் குடியேற்றப் பிரச்சினைகளில் எவ்வித் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர்.

**இந்தியா - கனடா உறவில் மோசம்**

பனிப்போருக்கு பிறகு அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளுடன் இந்தியா உறவுகளை மேம்படுத்தி, படிப்படியாக முழுமையான சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. ஆனால் ஜி7, நேட்டோ நாடுகளுடன் பொருளாதார, வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை மேம்படுத்த இந்தியா முயற்சித்து வருகிறது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கு இடையேயான உறவில் ஏற்பட்டு வரும் விரிசல் மேலும் அதிகரிக்கிறது. எந்த மேற்கத்திய நாட்டுடனும் இவ்வளவு மோசமான உறவு இல்லை

சோவியத் யூனியன் உடைந்த பனிப்போருக்கு பிறகு எந்த மேற்கத்திய நாட்டுடனும் இந்தியாவின் உறவு இவ்வளவு மோசமாக இருந்ததில்லை என்பதும் உண்மையே.

# பிரிக்ஸ் அமைப்புக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

பிரிக்ஸ் அமைப்புக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என ரஷ்யாவில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக புறப்பட்ட பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு ஹபிரிக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பின் மாநாடு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான பிரிக்ஸ் அமைப்பின் 16 ஆவது உச்சிமாநாடு ரஷ்யாவின் தலைமையில் நடைபெற உள்ளது. ரஷ்யாவில் உள்ள காசான் பகுதியில் இன்றும், நாளையும் பிரிக்ஸ் உச்சிமாநாடு நடைபெறுகிறது.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு, ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி, ரஷ்யாவுக்கு இன்று புறப்பட்டுச் சென்றார். தனது பயணத்தின்போது, பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சு வார்த்தையை நடத்த இருக்கிறார்.

இதனை ஒட்டி பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் பயணமாக நான் இன்று ரஷ்யா புறப்பட்டுச் செல்கிறேன். 16 ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறேன்.

உலகளாவிய வளர்ச்சி, சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மை, காலநிலை மாற்றம், பொருளாதார ஒத்துழைப்பு, நெகிழ்ச்சியான விநியோகச் சங்கிலிகளை உருவாக்குதல், கலாச்சாரம் மற்றும் மக்களை மக்களுடன் இணைப்பது போன்றவற்றில் கலந்துரையாடலுக்கான முக்கிய தளமாக உருவான பிரிக்ஸ் அமைப்பிற்குள் உள்ள நெருக்கமான ஒத்துழைப்பை இந்தியா மதிக்கிறது. கடந்த ஆண்டு புதிய உறுப்பினர்களின் சேர்க்கையால் நிகழ்ந்த பிரிக்ஸ் விரிவாக்கம் அனைவரையும் உள்ளடக்கிய உலகளாவிய நன்மைக்கான உரையாடல்களை, திட்டங்கள் வகுத்தலை ஊக்குவித்துள்ளது.

ஜூலை 2024 இல் மாஸ்கோவில் நடைபெற்ற வருடாந்திர உச்சிமாநாட்டின் அடிப்படையில், எனது கசான் பயணம் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும். பிரிக்ஸ் அமைப்பின் மற்ற தலைவர்களையும் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பிரிக்ஸ் மாநாடு குறித்து பேட்டியளித்திருந்த ரஷ்ய ஜனாதிபதி புடின்,



"பிரிக்ஸ் என்பது மேற்கத்திய நாடுகளுக்கு எதிரானது அல்ல. இந்தியப் பிரதமர் மோடி கூறியதுபோல் இது மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதித்துவம் இல்லாத ஓர் அமைப்பு. பிரிக்ஸ் உலகளாவிய தெற்கு, தென்கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் வளர்ச்சியில் கவனத்தை குவிக்கிறது. பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் குறிப்பிடத்தக்க நிலப்பரப்பையும், மக்கள் தொகையையும் கொண்டுள்ளன. பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டு வருகிறது. சர்வதேச பொருளாதாரத்தில் பிரிக்ஸ் நாடுகள் முக்கிய பங்களிப்பு செய்யும் நாடுகளாக உருவெடுத்து வருகிறது.

சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக வளர்ந்து வருகிறது. சீனாவின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. ரஷ்யாவும் - சீனாவும் ஒரு தனித்துவ உறவைப் பேணுகிறது. எங்களது உறவு சர்வதேச ஸ்திரத்தன்மையை நிர்ணயிக்கிறது." என்று பேசியிருந்தார்.

# த.வெ.க. மாநாட்டு பணிகள் 80 சதவீதம் நிறைவடைந்தன

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் முதல்மாநில மாநாடு, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அடுத்த வி.சாலையில் ஒக்டோபர் 27 ஆம் திகதி நடைபெற உள்ளது.

85 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில், மாநாட்டுக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. மாநாட்டு மேடை 60 அடி அகலம், 170 அடி நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்அலங்கரிப்பு பணி நடைபெறுகிறது. திடலில் பார்வையாளர்கள் அமரும் இடங்களில், பகல்போல் ஜொலிக்கதிடல் முழுவதும் 15 ஆயிரம் ஹை மாஸ் விளக்குகள் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

திடலின் இருபுறமும் மொபைல் கழிப்பறை அமைக்க 300 தடுப்புகள் ஏற்படுத்தி வருகின்றனர். மாநாட்டு முகப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை போல அமைக்கப்படுகிறது. திடலைச் சுற்றி தகர தகடுகளால் மறைப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மாநாட்டு மேடைக்கு விஜய் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் வருவதற்கு தனிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மாநாட்டுத் திடலுக்குள் யாரும் வர முடியாதபடி, பவுன்சர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். மாநாடு நடைபெறும் பகுதிக்கு அருகாமையில் உள்ள விவசாய நிலங்களுக்கு செல்ல முற்பட்ட விவசாயிகளையும் பவுன்சர்கள் தடுத்தி நிறுத்தியுள்ளனர்.

மாநாடு வளாகத்தைச் சுற்றிலும் 20 ஆயிரம் மின்விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாநாடு பந்தலில் சுமார் 75 ஆயிரம் இருக்கைகள்போடப்பட உள்ளன. இரவு - பகலாக மாநாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதால் நாளைக்குள்



மாநாட்டுபந்தல் பணிகள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநாடு நடைபெறும் பகுதியில் எதிர்பாராது மழை பெய்தால் பாதிப்பு ஏற்படாத வண்ணம் மணல்பரப்பில் ஜல்லி கற்கள் குவியல் குவியலாக கொட்டப்பட்டு நிலப்பரப்பு உயர்த்தப்பட்டுள்ளது.

திடலின் உள்ளே செல்லும் மின் ஒயர்களை அகற்றி கேபிளாக பூமியில் புதைக்க மின்வாரியம் அனுமதி அளிக்கவில்லை. மாநாட்டுக்குத் தேவையான மின்சாரம் ஜெனரேட்டர்கள் மூலம் வழங்கப்பட உள்ளதாகத் தெரிகிறது. பாதுகாப்பு கருதி மாநாடு நடைபெறும் பகுதியில் உள்ள கிணறுகளை, இரும்பு கார்டர்கள் மீது மரப்பலகைகள் அமைத்து மூடப்படுகின்றன. தொண்டர்களுக்கு மாநாட்டுதிடலில் உணவு வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கூட்ட நெரிசல் ஏற்படும் எனக்கருதி, மாநாட்டுக்கு வரும் வாகனங்களிலேயே உணவு வழங்க திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையே, மாநாடு நடைபெறும் நாளன்று மழை பெய்யாமல் இருக்க நேற்று அதிகாலை த.வெ.க. சார்பில் யாகம் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

# இஸ்ரேலுக்கு ‘தாட்’ தடுப்பு ஏவுகணை: ஈரானை சமாளிக்க அமெரிக்கா வழங்கியது



ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தினால், அதை நடுவானில் இடைமறித்து அழிக்க இஸ்ரேலுக்கு ‘தாட்’ஏவுகணைகளை அமெரிக்கா வழங்கியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் தெரிவித்தார்.

காசாவில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது. ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் லெபானான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி ஹிஸ்புல்லா முக்கிய தலைவர்களை கொன்றது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான், இஸ்ரேல் மீது கடந்த 1 ஆம் திகதி 180 இற்கும் மேற்பட்ட சூப்பர்சோனிக் ஏவுகணைகளை வீசியது. இவற்றை இஸ்ரேலின் அயர்ன் டோம் தடுப்பு ஏவுகணைகளால் அழிக்க முடியவில்லை.

இதனால், அமெரிக்க தயாரிப்பான ‘தாட்’ வான் தடுப்பு ஏவுகணைகளை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்,

“இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவ தாட் வான் தடுப்பு ஏவுகணை கருவிகள் மற்றும் அவற்றை இயக்க 100 அமெரிக்க வீரர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். ஈரான் மீது இஸ்ரேல் எப்போது, எப்படி தாக்குதல் நடத்தும் என்ற புரிதல் எனக்கு உள்ளது. இருவரும் மாறி மாறி தாக்கிகொள்வதை நிறுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது” என்றார்.

உக்ரைன் செல்லும் முன் பேட்டியளித்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆஸ்டின் லாய்ட்,

“அமெரிக்காவின் நவீன ‘தாட்’ வான் தடுப்பு ஏவுகணைகளை அமெரிக்க ராணுவம் இஸ்ரேலுக்கு அனுப்பி தயார் நிலையில் வைத்துள்ளது. ஈரான் மீது இஸ்ரேல் எப்படி தாக்குதல் நடத்தும் எனத் தெரியவில்லை. அது இஸ்ரேலின் முடிவு. இரு நாடுகள் இடையேயான பதற்றத்தை குறைக்க நாங்கள் தொடர்ந்து அனைத்தையும் செய்வோம்.”– என்றார்.

மத்திய கிழக்கு பகுதியில் போரை விரிவுபடுத்துவதை இஸ்ரேல் தவிர்க்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஈரானின் அணு சக்தி இடங்கள், எரிசக்தி கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளிப்படையாக தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.





# கியூபா மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியது

கியூபாவில் தற்போது மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்புவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒஸ்கார் சூறாவளி கிழக்கு கியூபாவை கடந்த நிலையில், கியூபா முழுவதும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சுமார் 10 மில்லியன் மக்கள் மின்சார விநியோகமின்றி சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

அத்துடன், எதிர்வரும் வியாழக்கிழமை வரை அனைத்து அத்தியாவசியமற்ற பணியிடங்களை மூடுவதற்கும், பாடசாலை கல்வி நடவடிக்கைகளை இரத்து செய்வதற்கும் கியூபா அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அத்துடன், அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், தலைநகர் ஹவானாவில் 90 சதவீதம் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளதாக கியூபா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





பக்கங்கள் 02

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 22/10/2024

## சந்தையிலிருந்து மீள பெறப்படும் 6000 ஹைபிரிட் ரக வாகனங்கள்

கனடாவில் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் ஹைபிரிட் ரக வாகனங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஆயிரக்கணக்கான ஹைபிரிட் ரக 02



# பிரதமர் பதவியை ஏற்கத் தயார் பெண் அரசியல்வாதி அறிவிப்பு

**அண்மைக் காலமாக கனடா பிரதமர் ட்ரூடோவிற்கு எதிராக மக்கள் மத்தியிலும் கட்சிக்கு உள்ளேயும் பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்படுகின்றன.**

**இவ்வாறான ஒரு பின்னணியில் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என பிரிட்டிஷ் கொலம்பிய மாகாண முன்னாள் முதல்வர் கிறிஸ்டி க்ளாக் தெரிவித்துள்ளார்.**

கனடிய பிரதமர் பதவி விலகினால் அந்தப் பதவியை பொறுப்பேற்று நாட்டை வழிநடத்த தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

58 வயதான கிளார்க் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாண முதல்வராக கடமையாற்றியுள்ளார்.

லிபரல் கட்சி மற்றும் நாடு என்பனவற்றின் எதிர்காலம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவும் நாட்டை வழி நடத்தவும் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கி வரும் கடுமையான சவால்களுக்கு நடைமுறை ரீதியான தீர்வு திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.







# இந்திய தூதரகங்களை நிரந்தரமாக மூடுங்கள்

## சீக்கிய அமைப்புகள் கோரிக்கை

இந்தியாவுக்கு எதிரான கனடா அரசின் நடவடிக்கைகளை சீக்கிய அமைப்புகள் வரவேற்றுள்ள நிலையில் அங்குள்ள இந்திய தூதரகங்களை நிரந்தரமாக மூட சீக்கிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கனடாவின் வான்கோவெரைச் சேர்ந்த சீக்கிய சமூகத்தினர் அண்மையில் பேரணியாகச் சென்று வான்கோவெரில் உள்ள இந்திய தூதரக அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, வான்கோவெர் மற்றும் ரொறன்ரோ வில் உள்ள இந்திய தூதரகங்களை நிரந்தரமாக மூடுமாறு சீக்கிய அமைப் புகள் கோரிக்கை விடுத்துள் ளன.

C2



# ஜஸ்டின் ட்ரூடோவை பதவி விலகுமாறு பின்வரிசை எம்.பி. பகிரங்க கோரிக்கை

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை பதவி விலகுமாறு அந்தக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

லிபரல் கட்சியின் பின்வரிசை உறுப்பினரான சீன் கேசீ என்பவர் இவ்வாறு பகிரங்க கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

சீன், சார்லடோன் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் ட்ரூடோ பதவி விலகுவதற்கு இதுவே பொருத்தமான தருணம் என தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவி விலக வேண்டுமென மக்கள் வெகுவாக எதிர்பார்க்கின்றனர் எனவும் மக்களின் மனநிலை அதுவாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுமாறு அவரது கட்சியை சேர்ந்த ஒருவர் பகிரங்கமாக கோரிக்கை விடுத்தமை இதுவே முதல் சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது.




# நோய்க்கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டதால் திரும்பப் பெறப்படும் உணவுப்பொருள்

கனடாவில் மீண்டும் ஒரு உணவுப் பொருளில் நோய்க்கிருமிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால், அந்த உணவுப் பொருளை திரும்பப் பெறுவதாக உணவு தயாரிப்பு நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

கனடா மற்றும் அமெரிக்காவில், உறையவைக்கப்பட்ட waffle என்னும் உணவில் லிஸ்டீரியா என்னும் நோய்க்கிருமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த உணவுப்பொருளைத் தயாரிக்கும் TreeHouse Foods என்னும் நிறுவனம், Great Value, Selection, Compliments மற்றும் No Name என்னும் பிராண்ட் பெயர்களில் விற்பனை செய்யப்படும் waffle உணவுகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

என்றாலும், இந்த கிருமியால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், உணவு தயாரிக்கும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட வழக்கமான பரிசோதனைகளில்தான் அந்த கிருமி பாதிப்பு இருந்தது தெரியவந்ததாகவும் TreeHouse Foods நிறுவனம் தெரிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன், கிர்ணிப் பழங்கள், நொறுக்குத்தீனிகளில் நோய்க்கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டது நினைவிருக்கலாம். அத்துடன், சில குளிர்பானங்களில் இதே லிஸ்டீரியா கிருமியும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த லிஸ்டீரியா என்னும் கிருமி, சிறு பிள்ளைகள், வயதானவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு சக்திக் குறைபாடு கொண்டவர்களில் மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதுடன், சில நேரங்களில் மரணத்தையும் ஏற்படுத்தக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்தையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹொண்டா நிறுவனத்திற்கு சொந்தமான ஹைபிரிட்டாக வாகனங்கள் குறித்து இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

61000 ஹோண்டா ஹைபிரிட் ரக வாகனங்கள் இவ்வாறு வாபஸ் பெறுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்



பட்டுள்ளது.

உயர் அழுத்தம் காரணமாக எரிபொருள் தாங்கியில் ஏற்பட்ட கோளாரினால் எரிபொருள் கசிவடைந்து தீ பற்றி சொல்லக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வாகன விபத்து அல்லது காயங்களோ ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ரக வாகனங்களே சந்தையில் இருந்து கனடிய சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த வகை வாகனங்களை பதிவு செய்து கொண்டவர்களுக்கு நிறுவனம் தகவல்களை வழங்கியுள்ளது.